# ஆகஸ்ட் - 30 - புதன்
## உமது ஆற்றலைவிட்டு நான் எங்கே செல்லக்கூடும்?
## திபா. 139:7

## முதல் வாசகம்: 1 தெசலோனி 2: 9 -13

அன்பர்களே! நாங்கள் எவ்வாறு பாடுபட்டு உழைத்தோம் என்பதை நினைத்துப் பாருங்கள். உங்களுள் எவருக்கும் சுமையாய் இராதபடி, எங்கள் பிழைப்புக்காக இராப் பகலாய் வேலை செய்துகொண்டே, கடவுளுடைய நற்செய்தியை உங்களுக்குப் பறைசாற்றினோம்.நம்பிக்கை கொண்டுள்ள உங்கள் முன்பாக நாங்கள் மிகவும் தூய்மையோடும் நேர்மையோடும் குற்றமின்றியும் ஒழுகினோம் என்பதற்கு நீங்களும் சாட்சி, கடவுளும் சாட்சி!ஒரு தந்தை தம் பிள்ளைகளை நடத்துவதுபோல உங்களை நடத்தினோம்.தம்முடைய ஆட்சியிலும் மாட்சியிலும் பங்குபெற உங்களை அழைக்கும் கடவுளுக்கு ஏற்ப நடக்குமாறு உங்கள் ஒவ்வொருவருக்கும் அறிவுரை வழங்கினோம் உங்களை ஊக்குவித்தோம் வற்புறுத்தினோம். இவையெல்லாம் உங்களுக்குத் தெரிந்தவையே. கடவுளின் வார்த்தையை நீங்கள் எங்களிடமிருந்து கேட்டபோது அதை மனித வார்த்தையாக அல்ல, கடவுளின் வார்த்தையாகவே ஏற்றுக் கொண்டீர்கள். இதற்காக நாங்கள் கடவுளுக்கு இடைவிடாது நன்றி கூறுகிறோம். உண்மையாகவே அது கடவுளுடைய வார்த்தைதான் அதுவே நம்பிக்கை கொண்ட உங்களில் செயலாற்றுகிறது.

**பதில்பாடல்:** ஆண்டவரே நீர் என்னை ஆய்ந்து அறிந்திருக்கிறீர்

## நற்செய்தி : மத்தேயு 23 : 27 – 32

அக்காலத்தில் இயேசு கூறியதாவது : வெளிவேடக்கார மறைநூல் அறிஞரே, பரிசேயரே, ஐயோ! உங்களுக்குக் கேடு! ஏனெனில் நீங்கள் வெள்ளையடித்த கல்லறைகளுக்கு ஒப்பானவர்கள். அவை புறம்பே அழகாகத் தோற்றமளிக்கின்றன் அவற்றின் உள்ளேயோ இறந்தவர்களின் எலும்புகளும் எல்லாவகையான அழுக்குகளும் நிறைந்திருக்கின்றன. அவ்வாறே நீங்களும் வெளியே மக்களுக்கு நேர்மையாளராய்த் தோற்றமளிக்கிறீர்கள். ஆனால் உள்ளேயோ போலித்தனமும் நெறிகேடும் நிறைந்தவர்களாய் இருக்கிறீர்கள். ”வெளிவேடக்கார மறைநூல் அறிஞரே, பரிசேயரே, ஐயோ! உங்களுக்குக் கேடு! ஏனெனில் நீங்கள் இறைவாக்கினர்களின் கல்லறைகளைக் கட்டுகிறீர்கள் நேர்மையாளரின் நினைவுச் சின்னங்களை அழகுப்படுத்துகிறீர்கள். ”எங்கள் மூதாதையர் காலத்தில் நாங்கள் இருந்திருந்தால் இறைவாக்கினர்களின் கொலைக்கு உடந்தையாக இருந்திருக்க மாட்டோம்” என்கிறீர்கள். இவ்வாறு நீங்கள் இறைவாக்கினரைக் கொன்றவர்களின் வழிமரபினர் என்பதற்கு நீங்களே சாட்சிகள். உங்கள் மூதாதையர் செய்த கொடுமையின் அளவுக்கு நீங்களும் செய்து முடியுங்கள்“ என்றார்.

**தியானம் :** இன்றைய நற்செய்தி வாசகத்தில் இயேசு மறைநூல் அறிஞர்களையும், பரிசேயர்களையும் வெளிவேடக்காரர்களே என்று கடிந்துகொள்வதை நாம் வாசிக்கின்றோம். மறைநூல் அறிஞர்கள் என்பவர்கள் கடவுளுடைய வார்த்தைகளை நன்கு கற்றுத் தேர்ந்தவர்கள், பரிசேயர்கள் இறைவனுடைய சட்டதிட்டங்களில் பாண்டித்தியம் பெற்றவர்கள். இப்படி கல்விலும் அறிவிலும் சிறந்து விளங்கும் மறைநூல் அறிஞர்களையும் சதுசேயர்களையும் ஆண்டவர் இயேசு கடிந்துகொள்வதற்கு காரணம் என்ன? நாம் பெறும் கல்வி, அறிவு இவையெல்லாம் நம்மை ஒரு நல்ல பண்புடைய மனிதனாக மாற்ற வேண்டுமே தவிர பிறரை தாழ்மையாக பார்ப்பதற்கும், நம்மைநாமே உயர்த்திக் கொள்வதற்கும், பொய், ஏமாற்று வேலைகள் செய்வதற்கும் அவைகள் பயன்படகூடாது. தன்னைத்தானே உணர்ந்து கொள்ள உதவ வேண்டும் என்பது தான் கல்வியின் இலக்கு ஆனால் மனிதன் தன்னுள் இருக்கின்ற இறைவனின் ஆற்றலைக்கண்டு அதன்படி வாழாமல் உலகத்தில் தன்னை நிலைநிறுத்திக் கொள்வதற்காக பொய்யான முகமுடிகளை அணிந்துகொண்டு வாழ்ந்து கொண்டிருக்கின்றான். அதற்கு கல்வியும் நமது அறிவும் உடன்போகின்றது. போலியான உறவுகள், போலியான ஆடம்பாரங்கள், போலியான அன்பு என்று எல்லாவற்றிலும் போலிகளை நாம் காண்கின்றோம். குடும்பத்திற்காக, சமூகத்திற்காக, நண்பர்களுக்காக ஏன் கடவுளுக்காக என்றுகூட நடித்துக் கொண்டிருக்கும் பலரை நாம் காண்கின்றோம். ஆனால் அவர்களுடைய உள்ளம் சவக்குழி போன்று கவலைகளாலும், தனிமையாலும், வெறுப்பாலும், சோகங்களாலும் நிரப்பப்பட்டிருக்கின்றது. “இவ்வுலகின் தெய்வம் நம்பிக்கை கொண்டிராதோரின் அறிவுக் கண்களைக் குருடாக்கிவிட்டது. எனவே அவர்கள் கடவுளின் சாயலாய் விளங்கும் கிறிஸ்துவின் மாட்சி பொருந்திய நற்செய்தி ஒளியைக் காண முடிவதில்லை” (2கொரி4:4) நம்முடைய அறிவுக் கண்களை ஆண்டவர் திறக்க வேண்டுமென்றால் இன்றைய முதல் வாசகத்தில் நாம் வாசிப்பதுபோல கடவுளுடைய வார்த்தைகளை உள்ளத்தில் ஏற்றுக்கொண்டு நம்பிக்கையின் வழியாக வாழ்க்கையில் நாம் செயல்படவேண்டும். வெளியிலிருப்பவற்றால் நீங்கள் இயக்கப்படாமல் உங்களுக்குள் இருக்கும் சத்தியத்தால் (உண்மையால்) இயக்கப்படும்போது உண்மையுள்ள மனிதர்களாக வாழமுடியும். “என் வார்த்தைகளை நீங்கள் தொடர்ந்து கடைப்பிடித்து வந்தால் உண்மையில் என் சீடர்களாய் இருப்பீர்கள். உண்மையை அறிந்தவர்களாயும் இருப்பீர்கள். உண்மை உங்களுக்கு விடுதலை அளிக்கும்” (யோவா.8:31-32). எனவே வெளிவேடக்காரர்களாக வாழ்ந்து இறைவனின் சினத்திற்கு ஆளாகாமல் இறைவனின் வார்த்தையைக் கேட்டு அதன்படி வாழுவதன் மூலம் இறைவனின் அன்புப் பிள்ளைகளாகும் வரத்தைப் பெற்றுக்கொள்வோம்.